ஈழநாடு
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No.: P .1632
Eelanadu
விலை ரூ. 30/=

# சிங்கள ஆதிக்கத்தை தமிழ் மண்ணில் நிறுவுவதற்கான கருவியா புத்தர்?

தொல். திருமாவளவன் கண்டனம்

சென்னை, நவ. 19

கௌதம புத்தரின் போதனைகளுக்கு எதிராக - பௌத்த தம்மத்துக்கு முற்றிலும் விரோதமாக, கௌதம புத்தரையே இழிவுபடுத்துவது போன்று தமிழர்களை ஆக்கிரமிக்கும் ஒரு கருவியாக பௌத்தம் பயன்படுத்தப்படுகிறது என்று தமிழ்நாட்டின் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் 07

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 19.11.2025 புதன்கிழமை இதழ் : 323 பக்கங்கள் : 08

## - இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் -

# இலங்கை தமிழ் அரசு கட்சியினர் ஜனாதிபதியுடன் இன்று சந்திப்பு!

யாழ்ப்பாணம், நவம்பர் 19

இலங்கை தமிழ் அரசு கட்சியினர் இன்றையதினம் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவை சந்தித்து தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் பேசவுள்ளனர்.

இந்த சந்திப்பு இன்று புதன் கிழமை மதியம் ஒரு மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது. இந்தத் தகவலை இலங்கை தமிழ் அரசு கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் உறுதிப்படுத்தினார்.

இந்த சந்திப்பில், தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வுடன் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிற பிரச்னைகள், வடக்கு, கிழக்கு அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் பேசப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதில், இலங்கை தமிழ் அரசு கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் 8 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர்.

தேசிய இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுடன் பேசுவது என்று இலங்கை தமிழ் அரசு கட்சி இறுதியாகக் கூட்டிய மத்திய குழுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, சந்திப்புக்கான நேரம் கோரி ஜனாதிபதி அநுர குமாரவுக்கு கட்சியின் சார்பில் கடந்த செப்ரெம்பர் 07

# புலிகளை நினைவுகூர்ந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, நவ. 19

நாட்டில் 30 ஆண்டு காலமாக இடம்பெற்ற உள்நாட்டு போரில் உயிரிழந்த தமது உறவுகளை நினைவு கூருவதற்கு எவ்வித தடையும் இல்லை. ஆனால், அந்த போர்வையில் பயங்கரவாதிகள் நினைவுகூரப்பட்டால் அதனுடன் தொடர்புடையோருக்கு 07

# யார் அதிகாரத்துக்கு வந்தாலும் பேரினவாதப்போக்கு மாறாது

யாழ். பல்கலை. மாணவர் ஒன்றியம்

த.பிரதீபன், பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம், நவ. 19

திருகோணமலையில் அகற்றப்பட்ட புத்தர் சிலை எதிர்ப்புகளை மீறி மீண்டும் நிறுவப்பட்ட செயல் எந்த அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தாலும் சிங்கள பேரினவாதப் 07

# புத்தருக்கு சொந்தமான பூமியில் தமிழ், முஸ்லிம்கள் வாழ்கின்றனர்

ஞானசார தேரர் திருமலையில் தெரிவிப்பு



திருகோணமலை, நவ. 19

பௌத்த மதம் என்பது பல ஆண்டுகளாக இலங்கையில் உள்ள ஒரு மதமாகும். புத்தருக்கு சொந்தமான இலங்கை பூமியில்தான் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் வாழ்கின்றனர் - இவ்வாறு கலகொடை அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் புதிதாக புத்தர் சிலை வைக்கப் பட்ட இடத்துக்கு 07

## திருமலை புத்தர் சிலை விவகாரம்:

# தேசிய ஒருமைப்பாட்டு குழுவை அமைக்க நடவடிக்கை எடுங்கள்

எதிர்க்கட்சி தலைவர் கோரிக்கை



கொழும்பு, நவ. 19

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பான பிரச்னைகளுக்கு தீர்வு காண ஜனாதிபதி தலைமையில் உடனடியாக நடைமுறையாகும் வகையில் தேசிய ஒருமைப்பாட்டு குழுவொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை 07

# உயிர்மாய்ப்பில் ஆண்கள் அதிகம்

நியூயோர்க், நவ. 19

இலங்கையில் ஆண்கள் மன அழுத்தம், பதற்றம் போன்றவற்றால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதனால், தற்கொலை செய்யும் வீதமும் அதிகமாகியுள்ளது என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன் 07

# திருமலை விவகாரம் மூலமாக இனவாதத்தை தூண்டாதீர்கள்

ஜனாதிபதி அநுர குமார வேண்டுகோள்

கொழும்பு, நவ. 19

திருகோணமலை புத்தர் சிலை விவகாரத்தை வைத்து இனவாதத்தை தூண்ட முயற்சிக்க வேண்டாம் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்ற அமர்வில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"எம்முடைய அரசாங்கத்தை ஜனநாயக ரீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ வீழ்த்த 07

# இந்தியாவின் ஒத்துழைப்பில் பலாலி, காங்கேசன் மேம்படும்

சபையில் அறிவித்தார் அமைச்சர் விஜித ஹேரத்

கொழும்பு, நவ. 19

வடக்கு, கிழக்கு மாகாண அபிவிருத்தி குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பலாலி விமான நிலையத்தையும் காங்கேசன்துறை துறைமுகத்தையும் இந்தியாவின் ஒத்துழைப்புடன் அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்குரிய அமைச்சரவை பத்திரமும் சமர்ப்பிக்கப்பட்டு, அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். 07

# துப்பாக்கிச்சூடு; தம்பதியர் பலி!

கொழும்பு, நவ. 19

தென்னிலங்கையில் நேற்று மாலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் தம்பதியர் உயிரிழந்தனர்.

அம்பாந்தோட்டை - தங்காலை - உனாக்குருவ பகுதியில் நடந்த இந்தச் சம்பவத்தில் 68 07

# இளங்குமரன் மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், நவ. 19

தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் மற்றும் கஜபார ஆகியோருக்கு எதிராக ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் மேன்முறை யீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, இளங்குமரன் எம்.பி. சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சாமர நாணயக்கார, கஜபாகுவுக்கு 07

# தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய வடக்கு காணிகளை விடுவிக்காதீர்கள்

- ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து
- யுத்தம் முடிந்து விட்டதாக கூறமுடியாது

கொழும்பு, நவ. 19

வடக்கு மாகாணத்தில் தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய காணிகளை ஒருபோதும் விடுவிக்கக்கூடாது - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றில் உரை யாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் பொறுப்பற்ற வகையில் செயல்படுகிறது. தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளால் தேசிய பாதுகாப்பு புறக்கணிக்கப்பட்டுள்ளது. 30 ஆண்டுகால 07

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை புத்தர் சிலைகள் இன ஐக்கியத்துக்கு பங்களிக்காது!

## ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி

யாழ்ப்பாணம், நவ. 19

திருகோணமலையிலும் திருக்கோணேஸ்வரத்திலும் அதன் வரலாற்று முக்கியத்துவத்தையும் தமிழரின் மத வழிபாட்டு உணர்வுகளையும் சிதைக்கும் வகையில் சட்டத்துக்குப் புறம்பாக நிர்மாணிக்கப்பட்டுவரும் புதிய புத்தர் சிலைகளும் அந்தப் பகுதியை பௌத்தமயமாக்கும் செயல்பாடுகளும் நாட்டின் வளர்ச்சிக்கும் இன ஐக்கியத்துக்கும் ஒருபோதும் பங்களிக்காது - இவ்வாறு ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாயிரத்து ஐநூறு வருடங்களுக்கும் மேலான பழமை வாய்ந்த நாயன்மாரின் தேவார பாடல் பெற்ற புனிதத் தலமாக விளங்குகின்ற திருகோணேஸ்வரர் ஆலய அடிவாரத்தைச் சுற்றிவளைத்து புத்தர் சிலைகளை நிர்மாணிப்பதுடன், பௌத்த நிறுவனங்களை உருவாக்குகின்ற வேலைகளை மாறி மாறி வருகின்ற அனைத்து சிங்கள அரசுகளும் மேற்கொண்டு வருகின்றன.

வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் மையப்புள்ளியான திருகோணமலையை சுற்றி வளைத்து ஏற்னவே சேருவில என்ற பெயரில் சிங்களத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது. மிச்சம் மீதியாக இருக்கின்ற தமிழ்ப் பிரதேசங்களையும் சிங்கள மயமாக்குவதனூடாக வடக்குக்கும் கிழக்குக்குமான நிலத்தொடர்ச்சியை இல்லாமல் செய்வதென்பது ஒவ்வொரு அரசாங்கத்தின் நோக்கமாக இருந்து கொண்டிருக்கின்றது. அந்த வகையில் பல தமிழ் கிராமங்கள் முற்றுமுழுதாக சிங்கள கிராமங்களாக மாற்றப்பட்டதுடன், இப்போதும் தமிழர், முஸ்லிம் வாழக்கூடிய பிரதேசங்களில் பௌத்த புராதன இடங்கள் என்ற பெயரில் புத்தகோயில்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸவும் ஏனைய பல சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களும் இலங்கை பௌத்தநாடு, பௌத்தத்துக்கு முதலிடம் உண்டு. ஆகவே, இவற்றுக்கெதிராக பொலிஸாரோ, படையினரோ, அரசாங்கமோ நடவடிக்கைகள் எடுக்கக் கூடாதென பாராளுமன்றத்தில் கூக்குரலிட்டு வருகின்றனர்.

வடக்கு-கிழக்கு என்பது தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பிரதேசம். இங்கு 80வீதத்துக்கு மேற்பட்டோர் தமிழ் பேசும் மக்களாகவும் இந்து, இஸ்லாமிய, கிறித்தவ மக்களாகவும் வாழ்கின்றனர். ஆகவே வடக்கு-கிழக்கிலும் பௌத்தத்துக்கு முதலிடம் வேண்டும் என்ற அரசாங்கத்தின் நடவடிக்கைகளும் எதிர்க்கட்சித் தலைவர்களின் கூற்றுகளும் முற்றுமுழுதாக மதவாதத்தையும் இனவாதத்தையும் அடிப்படையாகக் கொண்டவை.

நாங்கள் இனவாதிகள் அல்ல மதவாதிகள் அல்ல என்ற முகமூடியைப் போர்த்திக்கொண்டு சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தை நிறுவுவதற்கான அநுர அரசாங்கத்தின் திட்டங்களானவை அருவறுக்கத்தக்கதும் கண்டிக்கத்தக்கதுமாகும் - என்றுள்ளது. (ஐ)

# தமிழின படுகொலைக்கு நீதி கிடைக்க உதவுங்கள்

## ரவிகரன் எம்.பி. சபையில் கோரிக்கை

கொழும்பு, நவ. 19

முள்ளிவாய்க்கால் தமிழின படுகொலை குற்றவாளிகளான அப்போதைய ஆட்சியாளர்களையும் படைத் தரப்பினரையும் சர்வதேச நீதி விசாரணைக்கு உட்படுத்தி, தமிழின படுகொலைக்கு நீதியைப் பெற்றுத்தர தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசு ஒத்துழைக்க வேண்டும் என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி வேண்டும். 21ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய மனித பேரவலமாக முள்ளிவாய்க்கால் தமிழ் இனப் படுகொலையை காண்கிறோம். இதனுடன், தொடர்புடைய குற்றவாளிகளான அப்போதைய ஆட்சியாளர்களையும் படைத்தரப்பினரையும் சர்வதேச நீதி விசாரணைக்கு உட்படுத்துவதற்கும் தமிழ் இனப்படுகொலைக்கான நீதியைப்பெற்றுத் தருவதற்கும் இந்த அரசானது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் - என்று நேற்று முன்தினம் பாராளுமன்ற விவாதத்தில் அவர் கோரினார். (ஐ)

# மாற்று அவயவங்களுக்காக குழு ஒன்று இந்தியா பயணம்



யாழ்ப்பாணம், நவ. 19

மாற்று அவயவங்கள் பொருத்துவதற்காக இரண்டாம் கட்டமாக 35 பேர் கொண்ட குழு ஒன்று சென்னைக்கு சென்றுள்ளது.

வடக்கு, கிழக்கை சேர்ந்த அவயவங்களை இழந்தவர்களுக்கு கனடிய அரசு, கனடா வாழ் புலம்பெயர் மக்களின் நிதிதிப் பங்களிப்பில் யாழ். பல்கலைக்கழகத்தால் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் அவயவங்களை இழந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களை சேர்ந்த 35 பேர் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக சென்னைக்கு பயணமாகினர்.

போர் மற்றும் இதர பாதிப்புகளால் அவயவங்களை இழந்தவர்களே இவ்வாறு இந்தியா சென்றுள்ளனர்.

சென்னை ஸ்பாக் மிண்டா" நிறுவனம் ஊடாக இவர்களுக்கு நவீன செயற்கை அவயவங்கள் பொருத்தப்படவுள்ளன. (ஐ-03)

# மாற்றங்கள் கவிதை தொகுப்பு வெளியீடு



யாழ்ப்பாணம், நவ. 19

சுன்னாகம் சிவன் சிறுவர் கழகத்தின் ஸ்தாபகர் திருமதி கவிதாமலர் சுதேஸ்வரின் மாற்றங்கள் கவிதைத் தொகுப்பு நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

சுன்னாகம் பொது நூலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்த வெளியீட்டில் வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் அ.ஜெயகுமரன், மானிப்பாய் பெண்கள் கல்லூரி ஆசிரியர் திருமதி கலைவாணி மகாலிங்கசிவம் யாழ். மாவட்ட விதாதா அலுவலர் திருமதி கோமதி மாயக்கிருஷ்ணன் ஆகியோர் விந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

நூலாசிரியர் தனது குரு நாதர் ச. வே. பஞ் சாட்சரம் ஐயாவை கௌரவப் படுத்தும் முகமாக அவரின் மகள் திருமதி கலைவாணி மகாலிங்கசிவத்துக்கு முதல் பிரதியை வழங்கினார். (ஐ)

# கோடாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 19

கசிப்பு காய்ச்சுவதற்காக வைத்திருந்த 180 லீற்றர் கோடாவுடன் சந்தேகநபர் ஒருவரை சுன்னாகம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஏழாலை வடக்கை சேர்ந்த நபரே நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சுன்னாகம் பொலிஸாரின் விசேட நடவடிக்கையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

# கண்டாவளையில் மணல் அகழ்வை கட்டுப்படுத்தல் குறித்து உரையாடல்

கிளிநொச்சி, நவ. 19

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் பிரதேச செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கிளிநொச்சி - முல்லைத்தீவு பிரதி பொலிஸ் மா அதிபரின் ஏற்பாட்டில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போது, சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்தவது தொடர்பாகவும் மணல் அகழ்வால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்தரையாடலில் மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன், கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ஏ. சந்திரசேன, உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், கனிய வளத் திணைக்கள அதிகாரிகள், வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-05)

# அரசாங்கம் சொல்வதுபோன்று வாய்மூடி இருக்க தயாரில்லை

## இலங்கை ஆசிரியர் சங்கம்

வவுனியா, நவ. 19

அரசாங்கம் சொல்வது போல் 2027வரை அடிமையாக வாய்மூடி இருக்க நாம் தயாரில்லை என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், வரவு - செலவுத் திட்டம், கல்வி சீர்திருத்தம் என்பன தற்போதைய காலகட்டத்தில் மிக முக்கியமானவை. வரவு - செலவு திட்டத்தை எடுத்துக் கொண்டால் அதிபர், ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பை எதிர்பார்த்தோம். 1997ஆம் ஆண்டில் இருந்து சம்பள முரண்பாடு உள்ளது. அதற்காக நாம் பல போராட்டங்களை செய்தோம். அந்த போராட்டத்தின் விளைவாகத் தான் சுபோதினி ஆணைக்குழு உருவாக்கப்பட்டது

அந்த குழு சம்பள முரண்பாட்டை தீர்க்குமாறு யோசனை முன்வைத்தது. அதற்கு அமைவாக அதில் மூன்றில் ஒரு பகுதியை கொடுப்பதாக அப்போதைய அரசாங்கம் தீர்மானித்து 2022ஆம் ஆண்டு இது வழங்கப்பட்டது. அடுத்த இரண்டு கட்டங்களைப் பெறுவதற்காக 2024 இல் பல போராட்டங்களை முன்னெடுத்தோம். அந்தப் போராட்டத்தில் தற்போதைய அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள் உட்பட அதிபர் ஆசிரியர்கள் 23 பேர் உள்ளனர். அவர்களும் இணைந்து போராடினார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக ஜனாதிபதி செயலகம் முன்பாக போராடினோம். அந்தப் போராட்டத்தில் தலைமையில் இருந்தவர்கள்தான் தற்போது அரசாங்கத்தில் உள்ளனர். மூன்றில் இரண்டு சம்பளம் தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க ஒரு வார்த்தைகூட பேசவில்லை.

அதிபர், ஆசிரியர்கள் உட்பட அரச உத்தியோகத்தர்களுக்கு 2027 வரை சம்பள அதிகரிப்பை வழங்கியுள்ளோம். அதற்காக 33 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம் என்று தெரிவித்துள்ளார். ஆகவே, 2027 வரை சம்பளத்தைப் பற்றியோ சம்பள முரண்பாடு பற்றியோ பேச முடியாது. அரசாங்கம் சொல்வது போல் 2027 வரை அடிமையாக வாயை மூடி இருக்க நாம் தயாரில்லை. சம்பள முரண்பாடுகளை தீர்க்க வேண்டும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
19.11.2025 புதன்கிழமை
விசுவாவசு வருடம், கார்த்திகை 03

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# கற்பனையிலிருந்து வெளியில் வருவது அவசியம்

"திருகோணமலை புத்தர் சிலை விவகாரத்தில் அரசாங்கம் அம்பலப்பட்டு விட்டது - அவர்களின் இனவாத முகம் நிரூபணமாகி விட்டது", என்றவாறான குரலகளைக் கேட்க முடிகிறது. தேசிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் பதவியைத் துறக்க வேண்டும் என்றும் தமிழ் அரசு கட்சி குறிப்பிட்டிருக்கிறது. ஆனால், விடயத்தை ஆழமாக நோக்கினால் உண்மையிலேயே அம்பலமானது அரசாங்கமா அல்லது தமிழர்களின் நண்பன் என்று புகழப்பட்ட சஜித் பிரேமதாஸவா?

புத்தர் சிலை விவகாரம் ஒரு விடயத்தை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது. அதாவது, இனவாதத்தைத் தூண்டும் பதற்றங்களை அதிகரிப்பதன் ஊடாக அரசாங்கத்தை சிங்கள மக்கள் மத்தியில் வீழ்ச்சியுறச் செய்யும் முயற்சிகள் கைவிடப்படவில்லை என்பது ஒன்று. அடுத்தது, அதே வேளை அவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் நிலைமைகளை துணிவாக எதிர்கொள்வதை விடவும் நிலைமைகள் தங்களுக்கு பாதகமாக செல்வதைத் தடுக்கும் வகையில் ஒத்துப்போகும் முடிவைத்தான் அரசாங்கமும் மேற்கொள்ளும். புத்தர் சிலையை அகற்றுமாறு உத்தரவிட்டதன் ஊடாக துணிச்சலான தீர்மானத்தை எடுத்திருந்த அரசாங்கம் மறுகணமே, நிலைமைகள் சிக்கலடைவதை கருத்தில் கொண்டு அகற்றப்பட்ட இடத்தில் மீண்டும் சட்ட ரீதியாக சிலையை வைப்பதற்கான அனுமதியையும் வழங்கியது.

எனவே, என்னதான் முற்போக்கு வாதங்களை முன்வைத்தாலும்கூட, பௌத்தத்துக்கு முன்னுரிமையா அல்லது இல்லையா என்னும் கேள்வி வந்தால் அரசாங்கத்தின் நிலைப்பாடு முன்னுரிமையின் பக்கமாகத்தான் இருக்கும். அரசாங்கம் அவ்வாறு இருக்கக்கூடாது. அரசியல் தற்துணிவுடன் விடயங்களைக் கையாள வேண்டும் என்பது சிலரின் எதிர்பார்ப்பாக இருந்தால் அது, அவ்வாறு எதிர்பார்ப்பவர்களின் கற்பனையாகவே இருக்க முடியும். தென்னிலங்கை அரசியல் தளத்திலிருந்து அதிகாரத்தை கைப்பற்றும் எந்தவொரு கடசியாலும் அவ்வாறு சிந்திக்க முடியாது. அவ்வாறாயின், நாட்டில் ஒரு கலாசார புரட்சியொன்று இடம்பெற்று அரசியலில் பௌத்தத்தின் தலையீடு வேரறுக்கப்பட வேண்டும். இதுவெல்லாம் சுகமான கற்பனைகளுக்கு இதமானது.

எனவே, ஓர் ஆட்சியாளரை நோக்கும்போது ஒப்பீட்டு அடிப்படையில் மட்டும்தான் நோக்க வேண்டும். ஒன்றோடு இன்னொன்றை ஒப்பிட்டால் இருப்பது பரவாயில்லையா அல்லது இல்லையா என்பதுதான் கேள்வி. இந்தப் பின்புலத்தில் முன்னைய ஆட்சியாளர்களோடு ஒப்பிட்டால் தேசிய மக்கள் சக்தியை எவ்வாறு புரிந்து கொள்வது? ஒப்பீட்டடிப்படையில் சாதகமானதா அல்லது இல்லையா என்னும் கேள்விகளுக்கான பதில்களைத்தான் தேட வேண்டும். தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னைக்கு தேசிய மக்கள் சக்தி தீர்வைத் தருமென்பதெல்லாம் அதனை ஆதரித்தவர்களின் கற்பனை. ஏனெனில், அவ்வாறான அரசியல் சூழல் தென்னிலங்கையில் இல்லை என்பதைத்தான் புத்தர் சிலை விவகாரம் நிரூபித்திருக்கிறது.

ஒரு வகையில் அரசாங்கம் சில விடயங்களில் எதிரணியை காரணம் காண்பித்துத் தப்பித்துக் கொள்ளக்கூடிய சூழலே காணப்படுகிறது. சஜித் பிரேமதாஸவின் நிலைப்பாடு இதற்கு தெளிவான சான்றாகும். ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் கண்டி யாத்திரைக் காலத்திலிருந்து இதுதான் இலங்கைத் தீவின் கள யதார்த்தமாக இருக்கிறது.

அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமாயின் இருக்கின்ற அரசாங்கத்துக்கு எவ்வாறெல்லாம் நெருக்கடிளை கொடுக்கலாமோ அனைத்து வழிகளிலும் அதனைச் செய்யலாம். அதற்கு எவ்வித அரசியல் நேர்மையும் முக்கியமல்ல என்பதுதான் இலங்கையின் எதிர்க்கட்சி அரசியலாக இருந்திருக்கிறது. அதனைத்தான் இப்போது சஜித் பிரேமதாஸவும் தொடர்கிறார். தனக்கு வாக்களித்த தமிழ் மக்கள் தொடர்பில் அவர் சிறிதும் சிந்திக்கவில்லை. இதுதான் இந்த நாட்டின் நிலைமை என்றால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமிழ் மக்கள் விடயத்தில் அதிக தூரம் போகப்போவதில்லை. மேலும், அவர்களுக்குள் 1987 கால சிந்தனையும் இருக்கிறது.

## வட மாகாண மர நடுகை மாதம் கார்த்திகை - 2025

"என் மனதில் ஆழப்பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக் காடுகளைவிடச் சிறந்தது எதுவும் இல்லை."

- சார்ள்ஸ் டார்வின் (பரிணாமவியலின் தந்தை)



# திருகோணமலை சம்பவத்தை யாரும் இன, மதவாதமாக மாற்றவேண்டாம்!

### அமைச்சர் சுனில் வட்டகல கோரிக்கை



கொழும்பு, நவ. 19

திருகோணமலை சம்பவத்தை யாரும் இனவாத, மதவாதமாக மாற்றவேண்டாம். தற்போது அது நீதிமன்ற நடவடிக்கையாகும். அதனால் நீதிமன்ற நடவடிக்கையில் நாங்கள் தலையிடுவதில்லை என பிரதி அமைச்சர் சுனில் வடகல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2026ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிறைவேற்றுத்துறை, நீதிமன்றம், பாராளுமன்றம் ஆகிய மூன்று தூண்களும் சமநிலையாக செயற்பட வேண்டும் என நாங்கள் படித்திருக்கிறோம். ஆனால் அது செயற்பாட்டில் வரும் காலம் வரும்வரை நாங்கள் பார்த்திருந்தோம். ஒன்பதாவது நிறைவேற்று ஜனாதிபதியின் கீழ் இந்த மூன்று துறைகளும் சமநிலையாக செயற்பட இடமளிக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் ஜே.ஆர், உயர்நீதிமன்ற நீதியர்களுக்கு கல் எறிந்தார். அவ்வாறு எந்த சம்பவமாவது இந்த அரசாங்கத்தில் இடம்பெற்றிருக்கிறதா?

இப்போதுதான் நீதிமன்ற நடவடிக்கைகள் சுயாதீனமாக நடக்கின்றன. நீதிபதிகளின் இடமாற்றம் தொடர்பில் நீதிச்சேவை ஆணைக் குழுவே நடவடிக்கை எடுக்கிறது. அதில் யாருக்கும் அழுத்தங்கள் கொடுக்க முடியாது. ஆனால் பாராளுமன்ற சிறப்புரிமைகளை பயன்படுத்திக்கொண்டு, பல விடயங்களையும் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை சம்பவத்தை ஒரு சிலர் இனவாதமாக்க முயற்சிக்கின்றனர். திருகோணமலையில் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளமை உண்மை. அது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அதேநேரம் நீதிமன்றத்துக்கும் அறிவித்திருக்கிறது. தற்போது அது நீதிமன்ற நடவடிக்கையாகும். அதனால் அந்த நீதிமன்ற நடவடிக்கையில் நாங்கள் தலையிடுவதில்லை. எனவே இந்த சம்பவத்தை இனவாத, மதவாதமாக மாற்றவேண்டாம்-என்றார். (அ)

# சீனாவில் மேலும் ஒரு தூதரக அலுவலகம் அமைக்க திட்டம்!

கொழும்பு, நவ. 19

சீனாவில் மேலுமொரு தூதரக அலுவலகத்தை நிறுவுவதற்கு இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது.

சீனாவில் இருந்து அதிகளவு வெளிநாட்டுப் பயணிகளை வரவழைக்கும் நோக்கிலேயே இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இதற்கமைய 2026 ஆரம்பத்தில் சீனாவின் செங்டு நகரில் மேற்படி கவுன்சிலர் ஜெனரல் அலுவலகம் அமையும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சீனாவில் சில நகரங்களில் இலங்கையின் கவுன்சிலர் ஜெனரல் அலுவலகங்கள் அமைந்துள்ளன. இந்நிலையிலேயே புதிய அலுவலகம் அமைகின்றது.

அதேபோல் பிரேசிலிலும் கவுன்சிலர் ஜெனரல் அலுவலகம் மீளத் திறக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்துவதற்கு பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன- என்றார். (அ)


## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு






**மேடம்**

**இடபம்**

குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். தொட்டது துலங்கும்.

**மிதுனம்**

புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் உதவுவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வழிய வந்து உதவுவார்கள்.

**கடகம்**

சில முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். வியாபாரத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி உண்டு.

**சிம்மம்**

குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள்.

**கன்னி**

கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். புது முடிவுகள் எடுப்பீர்கள். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். மரியாதைக் கூடும்.

**துலாம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

**விருச்சிகம்**

பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போங்கள். சில காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டிய சூழல் உருவாகும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். ஆதாயம் தரும் நாள்.

**தனுசு**

தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். பிள்ளைகளால் உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். வியாபாரம் தழைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

**மகரம்**

எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். வியாபாரத்தை புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள்.

**கும்பம்**

குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**மீனம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் உடல் அசதி மனச்சோர்வு வந்து நீங்கும். உறவினர்கள் உறவினர்கள் உதவி கேட்டு தொந்தரவுகள் அதிகரிக்கும். திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

# பருத்தித்துறை மரக்கறி சந்தை விவகாரம்: தவிசாளருக்கு எதிரான வழக்கு தள்ளுபடி

*யாழ்ப்பாணம், நவ. 19*

பருத்தித்துறை நகர சபை செயலாளரால் தவிசாளருக்கு எதிராக பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

புதிய மரக்கறி சந்தை வர்த்தகர்கள், முன்னர் இயங்கிய நவீன சந்தை தொகுதிக்கு சென்ற நிலையில் வர்த்தகர்களுக்கும் பருத்தித்துறை நகர சபை உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலில் வர்த்தகர்கள் தாம் புதிய சந்தை தொகுதிக்கு செல்லமாட்டோம் என்று கூறியதன் அடிப்படையில் புதிய சந்தை தொகுதிக்கு தவிசாளரால் பூட்டுப் போட்டு பூட்டப்பட்டது. இதற்கு எதிராக பருத்தித்துறை நகர சபை செயலாளர் பொலிஸில், தவிசாளருக்கு எதிராக முறைப்பாடு செய்தார். இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபை இருக்கும்போது செயலாளர் இப்படியொரு முறைப்பாடு செய்ய முடியாது என்று தவிசாளர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நடராசா சுஜீவன் தெரிவித்தார். அத்தோடு, யாராவது பாதிக்கப்பட்டவர்கள் இருந்தால் முறைப்பாடு செய்ய முடியும் என்றும் அவர் கூறினார். தவிசாளர் தரப்பு சட்டத்தரணியின் கோரிக்கைக்கு அமைவாக குறித்த வழக்கு நீதிமன்றால் தள்ளுபடி செய்யப்பட்டது.

(எ)

# ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல் விடுத்த சிறைச்சாலை அதிகாரி!

*யாழ்ப்பாணம், நவ. 19*

இந்திய மீனவர்களை நீதிமன்றத்தின் வெளியே இருந்து வீடியோ எடுத்த ஊடகவியலாளர் மு. மதிவாணன் சிறைச்சாலை அதிகாரியால் அச்சுறுத்தலுக்குள் ளாக்கப்பட்டார்.

நீதிமன்றத்தின் வெளியில் இருந்து செய்தி சேகரித்துக் கொண்டிருந்த ஊடகவியலாளரை யாழ்ப்பாணம் சிறைச்சாலை அதிகாரி தடுத்து அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

உமக்கு எதிராக வழக்குப் போடுவன் என்று கூறி அச்சுறுத்திய அவர், செய்தி சேகரிக்க முனைந்தபோது வீடியோ கமெராவை தட்டிவிட்டு செய்தி சேகரிக்கவிடாது மிரட்டல் விடுத்தார்.

ஆனாலும் ஊடகவியலாளர் தனது செய்தி சேகரிக்கும் உரிமையை எடுத்துரைத்தபோதும் சிறைச்சாலை அதிகாரி அச்சுறுத்தல் விடுத்த வண்ணமே இருந்தார்.

(அ)

# சீரற்ற காலநிலை: யாழ்ப்பாணத்தில் 14 பேர் பாதிப்பு

*யாழ்ப்பாணம், நவ. 19*

சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

அத்தோடு 4 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

(எ-03)

# முல்லைத்தீவு மாவட்டம் கோடாலிக்கல்லு மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதான பணிகள் ஆரம்பம்

*முல்லைத்தீவு, நவ. 19*

முல்லைத்தீவு மாவட்டத்தின் கோடாலிக்கல்லு மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கான சிரமதான பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாவீரர்களுக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டதை தொடர்ந்து சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அந்த வகையில் கோடாலிக்கல்லு மாவீரர் துயிலும் இல்ல பிரதேசத்தை அண்டிய அயல்



கிராமங்களில் உள்ள மக்கள், மாவீரர்களின் பெற்றோர் இணைந்து குறித்த சிரமதான பணியை முன்னெடுத்தனர். மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளில் அனைத்து உறவுகளையும் கலந்து கொள்ளுமாறும் பணிக்குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ)

# வளலாய் கடற்கரையில் ஒதுங்கிய பௌத்த சிலை

*யாழ்ப்பாணம், நவ. 19*

யாழ்ப்பாணக் கடற்கரையில் பௌத்த மதத்துடன் தொடர்புடைய சிலை ஒன்று கரையொதுங்கியுள்ளது.

வளலாய் பகுதியில் கடற்கரையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை குறித்த சிலை கரையொதுங்கியுள்ளது.

சிலையின் கைகள் சேதமடைந்த நிலையில் காணப்படுவதனால் வேறு நாட்டவர்கள் தங்கள் நாட்டு கடலில் போட்ட சிலையே வளலாய் பகுதியில் கரையொதுங்கி இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

மியன்மார் நாட்டில் பௌத்தர்கள் வாழ்கின்ற நிலையில், அங்கு உயிரிழந்தவர்களின் நினைவாக கடலில் விடப்படும் மூங்கிலிலான தொப்பங்கள் கடந்த காலங்களில் வடமராட்சிப் பகுதிகளில் கரையொதுங்கி இருக்கின்றன.



அவ்வாறே சேதமடைந்த சிலையை கடலில் போட்ட நிலையில் அந்த சிலை வளலாய் பகுதியில் கரையொதுங்கி இருக்கலாம் என நம்பப்படுகிறது.

குறித்த சிலை தற்போது வளலாய் கடற்தொழிலாளர் சங்க கட்டடத்தில் பாதுகாப் பாக வைக்கப்பட்டுள்ள நிலை யில், சிலை கரையொதுங்கியமை தொடர்பில் அச்சுவேலி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# திருவிளையாடல் புராண சொற்பொழிவு

*யாழ்ப்பாணம், நவ. 19*

சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு சிறீ நாகதம்பிரான் ஆலயத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 32 எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை

மாலை 04. 00 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் சைவப்புலவர் செ.த. குமரன் நிகழ்த்தும் "வரகுணனுக்குச் சிவலோகங்காட்டிய படலம்" என்னும் சொற்பொழிவும் சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பயங்கரவாதச் சட்டம் குறித்து பொதுமக்கள் கருத்தறிவு விரைவில்!

**சபையில் கூறினார் நீதி அமைச்சர்**

கொழும்பு, நவ. 19

**பயங்கரவாத தடை சட்டத்துக்கு மாற்றீடாக கொண்டுவரப்படவுள்ள, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பாக விரைவில் மக்கள் கருத்து கோரப்படவுள்ளது.**

நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்காரவினால் இந்த விடயம் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

நாட்டில் புதிய சட்டங்கள் மற்றும் சட்டங்களைத் திருத்துவது குறித்து விசேட நிபுணர்களின் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, தற்போது 14 விசேட நிபுணர்களின் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தல், சட்டத்தை உருவாக்குதல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்காக இந்த விசேட நிபுணர் குழுக்கள் செயற்படுகின்றன.

அதற்கமைய, பயங்கரவாத தடைச் சட்டத்தைத் திருத்தம் செய்து புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூல வரைபு விசேட நிபுணர் குழுவினால் என்னிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அது தற்போது தமிழ் மற்றும் சிங்கள மொழிகளுக்கு மொழிபெயர்ப்பு செய்யப்படுவதாக அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்தார்.



அதற்கமைய, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் குறித்து வெகுவிரைவில் மக்கள் கருத்து கோரப்படவுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# இனவாத, மதவாத பிசாசுகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்!

**திருகோணமலை சம்பவம் குறித்து அமைச்சர் சந்திரசேகர் எச்சரிக்கை**

கொழும்பு, நவ. 19

நாட்டில் சில இனவாத, மதவாத பிசாசுகள் உள்ளன. மக்கள் மத்தியில் இனவாத மற்றும் மதவாத பிரச்னைகளை கொண்டுவர முயற்சிப்பவர்களுக்கு எதிராக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு தாமரை கோபுரத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திருகோணமலையில் சட்டவிரோதமாக வைக்கப்பட்ட புத்தர் சிலை குறித்து ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்-

திருகோணமலை கடற்கரைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்ட பௌத்த வணக்க ஸ்தலத்தில் வைக்கப்பட்ட புத்தர் சிலை நீண்ட நேரப் போராட்டத்தின் பின்னர் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு அங்கிருந்து அகற்றப்பட்டது.

நாட்டில் சில இனவாத, மதவாத பிசாசுகள் உள்ளன. அவர்கள்தான் இதனைச் செய்கின்றனர்.

மக்கள் மத்தியில் இனவாத மற்றும் மதவாத பிரச்னைகளை கொண்டுவர முயற்சிப்பவர்களுக்கு எதிராக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ)

# சிறைச்சாலைகளில் நெரிசலால் மோசமான நிலையில் கைதிகள்!

**சாமர சம்பத் தசநாயக்க சுட்டிக்காட்டு**

கொழும்பு, நவ. 19

இலங்கையின் சிறைச்சாலைகளில் நிலவும் கட்டுக்கடங்காத நெரிசல் மற்றும் அதன் காரணமாக கைதிகள் எதிர்கொள்ளும் மனிதநேயமற்ற நிலைமைகள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சுக்கான செலவு தலைப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு அவர் இந்த விடயங்களை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் சிறைச்சாலைகளின் உத்தியோகபூர்வ கொள்ளளவு 10,750 ஆக இருக்கும் நிலையில், தற்போது சுமார் 37,000 கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்த அதிகப்படியான நெரிசல் நிலைமை காரணமாக, சிறைச்சாலைகளின் நிலைமை மிக மோசமாக உள்ளது.

அதிகபடியான நெரிசலால் மகசின் சிறைச்சாலையில் குழப்பங்கள் வெடிக்கத் தயாரான நிலை உள்ளது. இரவு நேரங்களில் சுமார் 500 கைதிகள் நிற்கின்ற நிலையிலேயே உறங்கவேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கைதிகளுக்குப் போதுமான கழிப்பறைகள் வசதிகள் இல்லை. இந்த நிலை நீடித்தால் எந்த நேரத்திலும் சிறைச்சாலைகளில் பாரிய குழப்பங்கள் வெடிக்கக் கூடும்.

அண்மையில் ஒரு கைதி சிறைக்கூடத்தின் பெரிய மதிலைத் தாண்டித் தப்பிச் சென்றுள்ளார். இந்தச் சம்பவத்தின்போது இருவர் காயமடைந்தனர். தப்பிச் சென்ற கைதியை இன்றுவரைப் பிடிக்க முடியவில்லை.

அதேநேரம், சிறைச்சாலைகளில் 10,750 கைதிகளுக்குப் போதுமான அதிகாரிகளே உள்ள நிலையில், அவர்களால் 37,000 இற்கும் மேற்பட்ட கைதிகளைக் கட்டுப்படுத்த வேண்டிய சூழல் உள்ளது.

சிறைச்சாலைக் காவலர்கள் 24 மணி நேரம் வேலை செய்யும் கட்டாயத்தில் உள்ளனர். இது அவர்களின் செயல்திறனையும் உளவியலையும் கடுமையாகப் பாதிக்கிறது-என்றார். (அ)

# திருமலையில் புத்தர் சிலை; பிளவுகளை உருவாக்கலாம்!

கொழும்பு, நவ. 19

திருகோணமலை துறைமுக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரைப் பகுதியில் இருந்து புத்தர் சிலை அகற்றப்பட்டமை தொடர்பில் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிக்கையொன்றை வெளியிட்டு விளக்கமளித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான சரியான நிலைமையை தெளிவுபடுத்துவதற்காகவே, குறித்த அறிக்கையை வெளியிடுவதாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

திருகோணமலை சிறி சம்புத்த ஜயந்தி போதிராஜ விகாரையின் தேரர்கள் மற்றும் அதன் நம்பிக்கையாளர்கள், திருகோணமலை நகரில் கடற்கரை பாதுகாப்பு வலயத்துக்குள் அத்துமீறி குடிலொன்றை அமைத்து புத்தர் சிலை ஒன்றை வைக்க முயற்சிப்பதாக முறைப்பாடு ஒன்று கிடைத்தது.

கடற்கரை பாதுகாப்பு மற்றும் கடற்கரை வள முகாமைத்துவத் திணைக்கள அதிகாரிகளே, திருகோணமலைத் துறைமுக பொலிஸ் நிலையத்தில் இந்த முறைப்பாட்டை செய்தனர்.

அதற்கமைய, பொலிஸ் அதிகாரிகள் உரிய இடத்திற்குச் சென்று, குறித்த அத்துமீறிய நிர்மாண வேலையை நிறுத்துமாறு அறிவுறுத்தியபோதிலும், கட்டுமானப் பணிகள் நிறுத்தப்படாமல் தொடர்ந்து நடைபெற்றதாக பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் புத்தர் சிலை வைக்கப்பட்ட இடத்துக்கு அருகில் உள்ள பகுதியில், இதற்கு முன்னரும் அத்துமீறிய நிர்மாணம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதனை அகற்றுமாறு கோட்டை வீதி, திருகோணமலையில் அமைந்துள்ள சிறீ சம்புத்த ஜயந்தி போதிராஜ விகாரையின் விகாராதிபதிக்கு சுற்றாடல் அமைச்சு கடந்த ஒக்ரோபர் மாதம் 16 ஆம் திகதி எழுத்து மூலம் அறிவித்திருந்தது.

இதற்கு மத்தியிலேயே, பிரச்னைக்குரிய நிர்மாணமும் புத்தர் சிலை பிரதிஸ்டையும் இடம்பெற்றுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் இனங்களுக்கிடையில் பிளவுகளை உருவாக்க வழிவகுக்கலாம் என இலங்கை பொலிஸால் அவதானிக்கப்பட்டதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசம் அனைத்து இனத்தவர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பகுதி என்பதால், இந்தச் சம்பவத்தைப் பயன்படுத்தி யாரேனும் புத்தர் சிலைக்குச் சேதம் விளைவித்தால், அது பிரதேசத்தில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் பேணுவதில் பாரிய பிரச்னையை ஏற்படுத்தலாம் என பொலிஸார் கருதியதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அந்தச் சந்தர்ப்பத்தில் புத்தர் சிலையை பாதுகாப்பாக குறித்த இடத்திலிருந்து அகற்றி, திருகோணமலைத் துறைமுக பொலிஸ் நிலையத்துக்கு எடுத்து செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும், அத்துமீறிய கட்டுமானத்தை நிறுத்தச் சென்றபோது, அந்த இடத்தில் கூடியிருந்தவர்கள் அமைதியின்மையை ஏற்படுத்தினர்.

இதன்போதே, அதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், எந்தச் சந்தர்ப்பத்திலும் தேரர்கள் மீதோ அல்லது பொதுமக்கள் மீதோ தாக்குதல் நடத்தப்படவில்லை எனவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# குற்றச்சாட்டுக்களை மறுக்கிறார் மேர்வின்

கொழும்பு, நவ. 19

அமைச்சராக தாம் செயற்பட்ட காலப்பகுதியில் முறையற்ற வகையில் சொத்துக்களை சேகரித்ததாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா மறுதளித்துள்ளார்.

இலஞ்ச ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குறித்த சம்பவம்தொடர்பான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில், நீதிபதி மொஹமட் மிஹால் முன்னிலையில் நேற்று முன் தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, தம் மீதான குற்றச்சாட்டுக்களை மறுதலிப்பதாக சட்டத்தரணியூடாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வர் குறிப்பிட்டார்.

எனினும், மேர்வின் சில்வாவிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட வரவு-செலவு தொடர்பான சத்தியக் கடதாசியின் அடிப்படையிலேயே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இலஞ்ச ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் மன்றுக்கு அறிவித்தார்.

முன்னாள் அமைச்சரிடமிருந்து பெறப்பட்ட வரவு-செலவு அறிக்கையின் அடிப்படையில், குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கான ஆதாரங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி அவதானிக்கப்பட்டமையை அடுத்தே, இந்த வழக்கு தொடரப்பட்டதாகவும், இலஞ்ச ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் மன்றில் குறிப்பிட்டார்.

2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமது வருமானத்தை விட 150 மில்லியன் ரூபாய் பெறுமதியான சொத்துக்களை முறையற்ற வகையில் சேகரித்தமை தொடர்பிலேயே முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. (அ)

# பெரிய வெங்காயத்துக்கு விரைவில் நியாய விலை!

கொழும்பு, நவ. 19

இலங்கையில் உள்ளூர் பெரிய வெங்காய விவசாயிகளுக்கு நியாயமான முறையில் பயனளிக்கும் வகையில், ஒரு நிலையான விலையை அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது குறித்த முறையான திட்டத்தை உருவாக்குவதற்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன் தினம் காலை ஜனாதிபதி செயலகத்தில் விவசாய அமைச்சர் கே.டி. லால்காந்த மற்றும் வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

நெற் பயிர்ச்செய்கையாளர்களுக்கு இருப்பது போன்ற ஒரு முறையான திட்டம் பெரிய வெங்காயத்துக்கு அறிமுகப்படுத்துவது இதுவே முதல் முறை என அமைச்சர் கே.டி. லால்காந்த சுட்டிக்காட்டினார்.

மேலும், சிறிய நிலங்களில் பயிரிடும் விவசாயிகளின் நலன்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும், துல்லியமான தரவுகளின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்தப் புதிய திட்டத்தின் மூலம், விவசாயிகளின் சவால்களுக்கு முன்னுரிமை அளிப்பதோடு, நுகர்வோருக்கு மலிவு விலையில் வெங்காயம் கிடைப்பது உறுதி செய்யப்படும்.

விலை ஏற்ற இறக்கங்களே பிரதான சவாலாக உள்ளதாக விவசாயிகள் கோரிக்கை விடுத்த நிலையில், இந்த ஆண்டில் 17 வீதமாக உள்ள உற்பத்தியை 2027 ஆம் ஆண்டுக்குள் 27 வீதமாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் கே.டி. லால்காந்த கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தொகை கேரளக் கஞ்சாவுடன் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் கைது

## முக்கிய கடத்தல் வலையமைப்பு அம்பலம்



நிந்தவூர், நவ.19

பெருந்தொகை கேரளக் கஞ்சாவுடன் கைதான ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ். நிஷாந்த வெடகே தலைமையில் இந்தச் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது தாய், தந்தை, மகன் என ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே நிந்தவூர் பொலிஸாரால் போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த சந்தேக நபரிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் நிந்தவூர் பகுதியில் கஞ்சா கடத்தல் வலையமைப்பை முறியடிக்கும் வகையில் பொலிஸார் விரிவான தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது 302 கிராம் கேரளக் கஞ்சாவுடன் பெண் கைதானார். இவ்வாறு, கைதான பெண் வீட்டில் வைத்து கேரளக் கஞ்சாவை விற்பனை செய்பவர் என்பதுடன் இவர் வழங்கிய தகவலுக்கமைய வீட்டின் பின்னால் நிலத்தடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒன்றரை கிலோ கேரளக் கஞ்சா பிளாஸ்ரிக் பீப்பாயில் வைத்து புதைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

அத்துடன் குறித்த பெண்ணின் கணவனும் கைது செய்யப்பட்டார். பின்னர் கைதான இருவரும் கொடுத்த தகவலுக்கமைய அப்பகுதியில் போதைப் பொருள் கடத்தல் வட்டத்தின் முக்கிய நபராக அடையாளம் காணப்பட்ட சந்தேக நபர்களின் மகன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இவ்வாறு கைதான சந்தேக நபரின் வாக்குமூலத்துக்கமைய அருகிலுள்ள வெற்றுக் காணியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 5 கிலோ 700 கிராம் கேரளக் கஞ்சா பொலிஸாரால் மீட்கப்பட்டது.

அத்துடன் கேரளக் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு கைதான ஒரே குடும்பத்தை சேர்ந்த தாய், தந்தை, மகன் உள்ளிட்டோர் விளக்கமறியல் மற்றும் தடுப்புக் காவல் உத்தரவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (எ-01)

# வான் - ஓட்டோ விபத்தில் ஓட்டோ சாரதி உயிரிழப்பு

ஹற்றன், நவ. 19

பொல்பிட்டிய யடிபேலிய பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பலத்த காயமடைந்த ஓட்டோ சாரதி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து வட்டகொட நோக்கிச் சென்ற ஓட்டோவும் ஹற்றனிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற வானும் ஹற்றன்- கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேனை - பொல்பிட்டிய யடிபேலிய பகுதியில், நேருக்கு நேர் மோதி இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில், உயிரிழந்தவர் பொரளையைச் சேர்ந்த 53 வயதான எச். எம். இந்திக பிரியகுமார என அடையாளம் காணப்பட்டார். அவர் காயமடைந்த நிலையில் கிதுல்கல தலிகம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஓட்டோவின் பின்புற இருக்கையில் இருந்த ஒரு பெண்ணும் காயமடைந்து தலிகம பிரதேச மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

ஓட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்ததே விபத்துக்குக் காரணம் என பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் ஓட்டோவும் வானும் கடுமையாக சேதமடைந்துள்ளதுடன், வான் சாரதி சந்தேகநபராக கைது செய்யப்பட்டுள்ளார். அவர் ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொல்பிட்டிய போக்குவரத்து பிரிவு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. (எ)

கிளீன் சிறீலங்கா திட்டத்தின் கீழ்

# உற்பத்தித்திறன் மாதிரிக் கிராமம் அறிமுக நிகழ்வு சம்மாந்துறையில்

சம்மாந்துறை, நவ. 19

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் வேலைத்திட்டத்தின் ஊடாக இலங்கையின் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவையும் உள்ளடக்கும் வகையில் ஒரு கிராமத்தை தெரிவு செய்து கல்வி, பொருளாதாரம், சுகாதாரம் மற்றும் உடல்நலம், வீட்டு முகாமை மற்றும் சமூக நல்வாழ்வு, கலாசார மற்றும் ஆன்மீக அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய 06 முக்கிய கூறுகள் மூலம் குறித்த கிராமத்தை அபிவிருத்தி செய்ய அரசாங்கத்தால் எதிர்பார்க்கப்படுகின்றது.

கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டத்தின் கீழான சமூக உற்பத்தித்திறன் மாதிரி கிராமம் அறிமுக நிகழ்வு நேற்று உற்பத்தித்திறன் மேம்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் எல். நஜீமாவின் ஒருங்கிணைப்பின் கீழ் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் வி. வாஸீத் அஹமட், நிர்வாக உத்தியோகத்தர் ஜே. எம் ஜெமில், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம். ஹூசைன், மற்றும் பிரதேச செயலக கள உத்தியோகத்தர்கள், காரியாலய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பிரதான வளவாளராக அம்பாறை மாவட்ட உற்பத்தித் திறன் இணைப்பாளர் எம். அர்சாத் கலந்து கொண்டு உற்பத்தித் திறன் மாதிரி கிராம திட்டத்தின் எதிர்கால முன்னெடுப்பு பற்றி உரையாற்றினார்.(எ)

# நுகேகொடையில் எதிர்ப்பு பேரணி த. மு. கூட்டணி கலந்து கொள்ளாது

நுவரெலியா, நவ. 19

எதிர்வரும் 21 ஆம் திகதி நுகேகொடையில் எதிர்க்கட்சிகள் மேற்கொள்ளவுள்ள அரச எதிர்ப்புப் பேரணியில் தமிழ் முற்போக்கு கூட்டணி கலந்து கொள்ளாது என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

அக்கரப்பத்தனை நகரில் இடம்பெற்ற சங்கத்தின் முக்கியஸ்தர்கள் சந்திப்பில் பேசும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

“அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை அறிவித்த போது முதன் முதலாக நான் தான் ஜனாதிபதிக்கு பாராட்டு தெரிவித்து நன்றி கூறியிருந்தேன். அதேபோல், வரவு- செலவுத் திட்ட வாக்கெடுப்பின் போது அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்து வாக்களிக்க நாம் முடிவு செய்த நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எம்மை வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டார். அவர் எந்த விதமான மறுப்பும் தெரிவிக்கவில்லை.

இவ்வாறு இருக்கும் போது, சஜித் சம்பள உயர்வுக்கு எதிராக செயல்படுவதாகவும் அதை ஆட்சேபித்து வழக்குத் தாக்கல் செய்யப் போவதாகவும் சிலர் கூறுவதில் எந்த விதமான உண்மையும் கிடையாது. இது போலியான ஒரு மாயையை ஏற்படுத்தி மக்களை திசை திருப்ப அரசியல் ரீதியில் மேற்கொள்ளப்படும் ஒரு சதி முயற்சியாகும். எனவே, மக்கள் போலியான பிரசாரங்களை நம்பி ஏமாந்து மோசம் போய்விடக் கூடாது.

நல்லாட்சி அரசாங்கத்தில் நான் அமைச்சராக இருந்த போது, அக்கரப்பத்தனை ஊட்டுவெல்லி தோட்டத்தில் தலா 7 பேர்ச் காணியில் தனி வீட்டுத் திட்டத்தை அமுல்படுத்தி பயனாளிகளுக்கு காணி உறுதிப் பத்திரத்தையும் பெற்றுக் கொடுத்திருந்தேன். அந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தார்கள். அதேபோல், நுவரெலியா மாவட்டத்தில் பிரதேச சபைகள், பிரதேச செயலகங்கள் அதிகரிக்கப்பட்டிருந்தன. மலையக அபிவிருத்திக்கான அதிகார சபையும் உருவாக்கப்பட்டிருந்தது.- என்றார். (எ)

# மனைவி கொலை கணவன் கைது

மட்டக்களப்பு, நவ. 19

வாகரை, உரியன்கட்டு பிரதேசத்தில் திருமணமான இளம் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டார்.

இவ்வாறு கொலை செய்யப்பட்டவர் 22 வயதுடைய தட்டுமுனை பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

நேற்று முன்தினம் மாலை மனைவி மற்றும் கணவனுக்கு இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக கணவன் மனைவியை கொலை செய்ததாக தெரியவந்துள்ளது.

இதன் பின்னர் கணவன் தற்கொலைக்கு முயற்சித்த நிலையில், அவர் தற்போது மட்டக்களப்பு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

25 வயதுடைய சந்தேகநபர் மருத்துவமனையில் இருக்கும் போதே கைது செய்யப்பட்டு, பொலிஸ் பாதுகாப்பின் கீழ் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வாகரை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் கடுமையான மூடுபனி

ஹற்றன், நவ. 19

ஹற்றன் முதல் நுவரெலியா வரை நீண்டு செல்லும் ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் கடுமையான மூடுபனி நிலைமை நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோசமான வானிலை காரணமாக வீதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதோடு, விபத்துகளைக் குறைப்பதற்காக பொலிஸ் அதிகாரிகள் வாகனச் சாரதிகளிடம் விசேட கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

வீதியில் பயணிக்கும் அனைத்து சாரதிகளும் தமது வாகனங்களின் முகப்பு விளக்குகளை முறையாக ஒளிரச் செய்து, கவனமாகவும் மிகக் குறைந்த வேகத்திலும் பயணிக்க வேண்டும் என பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

விபத்துகளைக் குறைப்பதற்கு சாரதிகளின் விழிப்புணர்வும் ஒத்துழைப்பும் மிகவும் முக்கியம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

எனவே, வாகனச் சாரதிகள் இந்த அறிவுறுத்தல்களை கட்டாயம் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (எ)

# டிஜிற்றல் அறிவை மேம்படுத்த நுவரெலியாவில் வேலைத்திட்டம்

நுவரெலியா, நவ. 19

நுவரெலியா மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் பெண் பிரதிநிதிகளுக்கு டிஜிட்டல் அறிவை மேம்படுத்துவதற்காகவும் ஊடக நெறிமுறைகளைப் பின்பற்றுவது தொடர்பான பயிற்சி வழங்கும் “ஜனனி” வேலைத்திட்டம் நுவரெலியாவில் நடைபெற்றது.

இதில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலின் போது பெண்கள் எவ்வாறு ஊடக நெறிமுறையில் வித்தியாசமான அணுகுமுறைகளைக் கையாளுதல், நெறிமுறையைப் பின்பற்றுவதில் எதிர்கொள்ளப்படும் சவால்கள் தொடர்பில் விரிவாக பேசப்பட்டது இது சம்பந்தப்பட்ட காணொலி காட்சி மூலம் டிஜிற்றல் திரையில் காண்பிக்கப்பட்டு சிறப்பு வளவாளரால் விளக்கமளிக்கப்பட்டது.

கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் அஹமட் மனாஸ் மக்கீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் டிஜிற்றல் அறிவை மேம்படுத்துவதற்காகவும் ஊடக நெறிமுறைகளைப் பின்பற்றுவது தொடர்பான விடயங்கள் பங்குபற்றுநர்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டு அவை குறித்து விரிவாகப் பேசப்பட்டன. சிறப்பான ஊடக நெறிமுறை தொடர்பான பயிற்சிப் பட்டறையாக இது அமைந்திருந்தது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

மாத இறுதியில் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. பேச்சுக்கான நல்லெண்ண சமிக்ஞையாக வரவு - செலவு திட்டத்துக்கு எதிராக வாக்களிப்பதில்லை என்றும் அந்தக் கட்சி தீர்மானித்திருந்தது என்பதும் குறிப்பிடத் தக்கது. (ஐ)

## சிங்கள...

தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

ஈழமண்ணில் திருகோணமலை பகுதியில் நவம்பர் 16 அன்று புத்தர் சிலை ஒன்றை சிங்கள - பௌத்த பிக்குகள் நிறுவியுள்ளனர். அப்பகுதியைச் சார்ந்த தமிழ் மக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தவுடன் பொலிஸார் அதனை அப்புறப்படுத்தியுள்ளனர். ஆனால், இலங்கை பாராளு மன்றத்தில் சிங்கள - பௌத்த பேரினவாதிகள் புத்தர் சிலையை அப்புறப்படுத்திய நடவடிக்கையைக் கண்டித் ததுடன், உடனே அதனை அங்கே நிறுவிட வேண்டு மென கொக்கரித்துள்ளனர். இதனையடுத்து மீண்டும் அதே சிலையை அதே இடத்தில் நிறுவியுள்ளனர். இடதுசாரி பாரம்பரியத்தைச் சார்ந்தவர்களென காட்டிக் கொள்ளும் ஜே. வி. பி. அரசு, வழக்கமான "சிங்கள பேரினவாத அரசு"தான் என்பதை உறுதிப்ப டுத்தும் வகையில் செயல்பட்டுள்ளது. இந்த அடாவடி ஆதிக்கப் போக்கை விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

இலங்கையின் ஒற்றையாட்சி முறைமையின்கீழ் தமிழ் மக்கள் ஒருபோதும் நிம்மதியாக வாழமுடியாது. எனவே, புதிய அரசமைப்பில் தமிழர்களுக்கான இறை மையுடன் கூடிய "சமஷ்டியை" உறுதி செய்வதே இத்தகைய ஆக்கிரமிப்புகளிலிருந்தும் ஆதிக்கத்திலிருந் தும் அவர்களை விடுதலை செய்யும் - என்றுள்ளது. (ஐ)

## யார்...

போக்கு மாறாது என்பதையே உணர்த்துகிறது - இவ் வாறு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தொடர் பில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று விடுத்த அறிக்கையிலேயே மேற்படி விடயம் சுட்டிக் காட்டப்பட்டது.

அந்த அறிக்கையில், சட்டமுரணாக தமிழர் தாயகத் தில் வைக்கப்பட்டி ருந்த புத்தர் சிலை அகற்றப்பட்ட பின் பாராளுமன்றத் தில் மீண்டும் நிறுவுவோம் என்று குறிப்பிட்டு மீளவும் சிலையை மக்களின் எதிர்ப்புகளை மீறி நிறுவியிருக்கும் செயல் எந்த அரசாங்கம் அதிகாரத் துக்கு வந்தாலும் சிங்கள பேரினவாதப்போக்கு மாறாது என்பதையே உணர்த்துகிறது.

இனப்பிரச்சனையின் முக்கியகாரணமே சிங்கள - பௌத்த மயமாக்கல்தான். யுத்தத்தின் ஆணிவேரும் இதுதான். தொடர்ச்சியாக தமிழர் நிலங்கள் புத்த வழி பாடு என்ற பெயரிலே பௌத்த - சிங்கள மயமாக்கப்பட் டுக் கொண்டே இருந்துவந்துள்ளது. சிங்கள குடியேற் றங்களால் தமிழர் குடியேற்றப்பரம்பல் மாற்றியமைக்கப் பட்டுக் கொண்டே இருந்து வந்துள்ளது. வரலாற்றில் மகாவலி ஓயா, கல் ஓயா குடியேற்றம் என்று தமிழர் நிலங்கள் முற்றுமுழுதாக பெயர் மாற்றம் பெற்று முழுவ துமாக மாறியிருக்கிறது. தொடர்ச்சியாக இன்று வரை தமிழர்களின் தொல்லியல் நிலங்களான குருந்தூர் மலை, வெடுக்குநாறிமலை, உகந்தை மலை என்று பல் வேறு இடங்களில் பௌத்த ஆக்கிரமிப்பு நடைபெறு கின்றது. தையிட்டி, திரியாய் என்று தமிழர் நிலங்களும் இதில் இலக்கு வைக்கப்பட்டிருக்கிறது. இதில் இருந்து தமிழ் மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டிய விடயம் என்ன வென்றால் யார் ஆட்சிக்கு வந்தாலும் ஒரு விடயம் தவ றாமல் நடக்கும். அது, சிங்கள - பௌத்தமயமாக்கல். ஏனென்றால் அது திட்ட மிடப்பட்ட ஒரு நிகழ்ச்சி நிரல். தமிழ் மக்களின் இனப் பரம்பலை மாற்றுவதென் பது மாறி மாறிவரும் சிங்கள ஆட்சியாளர்களால் காலத்திற்கு காலம் நிகழ்ந்தேறிக் கொண்டே இருந்து வந்துள்ளது - என்றுள்ளது. (ஐ)

## தேசிய...

எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், பௌத்த மதத்துக்கு வழங்கப்படும் முன்னுரிமை தொடர்பில் நாம் அனைவரும் அறிவோம். இதேபோன்று மற்றைய மதங்களுக்கு வழங்கப்படும் உரிய கௌரவம் மற்றும் இடம் என்பன வழங்கப்பட வேண்டும். இந்நிலையில் உடனடியாக நடைமுறைப்ப டுத்தப்படும் வகையில் தேசிய ஒருமைப்பாட்டு குழு வொன்றை அமைக்க வேண்டும். ஜனாதிபதி அதனை செயல்படுத்த வேண்டும். இவ்வாறான பிரச்னைகள் ஏற்படும்போது இதனை பொலிஸாரிடம் ஒப்படைத்து பலனில்லை. நாட்டுத் தலைவர் இந்தப் பிரச்னையை தீர்ப்பதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும்.

இது சாதாரண பிரச்னையல்ல என்பதனை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். ஏனைய மதங்களில் இதுபோன்ற பிரச்னைகள் வரும்போதும் நாங்கள் இவ்வாறு செயல் பட்டோம். சிறந்த பௌத்தர்கள் போன்றே நடந்து கொண்டோம். ஆனால், தற்போது சில குழுக்கள் பௌத்த மதத்தை திரிபுபடுத்துகின்றன. இந்த நிலைமை யில் தேசிய ஒருமைப்பாட்டு குழுவை அமைக்க நடவடி க்கை எடுக்குமாறு நான் ஜனாதிபதிக்கு கூறுகின்றேன். ஜனாதிபதி தீயை உருவாக்கக்கூடாது. தீயை அணைப்ப தற்கே நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதுகாப்பு பிரிவினர் இதுபோன்ற விடயங்களில் தலையிடாது. நாட்டின் ஜனாதிபதி இந்தப் பிரச்னையில் இருந்து தப் பிச் செல்லாத வகையில், இந்த பிரச்னைக்கு தீர்வு காண் பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

## புலிகளை...

எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக் கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது. இதிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நாட்டில் இடம்பெற்ற சிவில் யுத்தத்தில் ஆயிரக்கணக்கானோர் தமது உறவினர்களை இழந்துள் ளனர். இழந்த தமது உறவினர்களை நினைவுகூருவதற்கு ஒவ்வொரு பிரஜைக்கும் உரிமையுண்டு. அதற்கு எவ்வித தடையும் இல்லை. இதனை அரசாங் கம் பல சந்தர்ப்பங் களில் அறிவித்திருக்கிறது. ஆனால் அந்த போர்வையில் பயங்கரவாத அமைப்பை சார்ந்தவர்களை நினைவுகூர அனுமதிக்க முடியாது. அவ்வாறு செயல்படுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார்.

## திருமலை...

முடியாது. இதனால், இனவாதத்தை தூண்டி இந்த ஆட்சியை கவிழ்க்க சிலர் விரும்புகின்றனர்.

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் குறித்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருடன் கலந்துரை யாடி நடந்த விடயங்களை அறிக்கையாக சமர்ப்பிக்கு மாறு கூறியுள்ளேன்.

நிர்மாணிக்கப்பட்டுள்ள சிலையை அகற்றவோ அல்லது மேலும் கட்டுமான வேலைகளை செய்யவோ அல்லது வேறு எவ்வித செயல்பாடுகளிலும் ஈடுபடவோ வேண்டாம் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எனவே, இந்தப் பிரச்னை முடிந்துவிட்டது. இவ்வா றிருக்க, அனுமான் தீ வைத்தது போல, தற்போது இந்தப் பிரச்னையை இனவாதமாக மாற்றி தீ வைக்க சிலர் முயல்கின்றனர். நாங்கள் இனவாதத்துக்கு மீண்டும் இடமளிக்க மாட்டோம் என்று உறுதியாக கூறிகொள்கி றோம். நாம் மட்டுமல்ல, இந்த நாட்டின் பௌத்த மக்களும் அதற்கு இடமளிக்க மாட்டார்கள்" - என்றும் அவர் கூறினார். (ஐ)

## தேசிய...

யுத்தத்தால் அனைத்து இன மக்களும் பாதிக்கப்பட் டார்கள். யுத்தம் முடிவடைந்து விட்டது என்று குறிப் பிட முடியாது. எதிர்காலத்தில் யுத்தம் ஒன்று தோற்றம் பெறலாம். ஆகவே, அவதானத்துடன் செயல்பட வேண்டும்.

வடக்கு மாகாணம் தேசிய பாதுகாப்பின் பிரதான கேந்திர மையமாகக் காணப்படுகிறது. வடக்கில் காணி பிரச்னை காணப்படுகிறது. தனிப்பட்ட பாதுகாப்பைக் காட்டிலும் தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு காணி விடுவிப்புக் குறித்து தீர்மானம் எடுக்க வேண்டும்.

பாதுகாப்பு காரணிகளுடன் தொடர்புடைய காணிகளை விடுவிப்பதற்கு பதிலாகக் காணி உரிமை யாளர்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அல் லது காணிகளுக்கு பதிலாக நட்டஈடு வழங்க வேண்டும். தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய காணிகளை இராணுவத்தினர் வசம் வைத்துக் கொள்ள வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் மீண்டும் யுத்தம் ஒன்று தோற்றம் பெறாத வகையில் தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய காணிகள் முறையாக அடையாளப்ப டுத்தப்பட வேண்டும். தேசிய பாதுகாப்புடன் தொடர் புடைய காணிகளை விடுவிக்கக்கூடாது. வடக்கு மக்க ளுக்கு அநீதி இழைக்க வேண்டும் என்று நாங்கள் குறிப் பிடவில்லை. காணிக்கு போதுமான அளவு நட்டஈடு வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

வடக்கு வாக்குகளை பெறுவதற்கு வழங்கிய வாக்கு றுதிகளுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்காமல் தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கி அரசாங்கம் செயல் பட வேண்டும். அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் தேசிய பாதுகாப்பு குறித்து தீர்மானங்களை எடுக்க வேண்டும்- என்றார். (ஐ)

## புத்தருக்கு...

நேற்றைய தினம் கலகொட அத்தே ஞான சார தேரர் சென்றார். அங்கேயே மேற்படி விடயத்தைத் தெரிவித் தார். அத்துடன், திருகோணமலை கடற்கரையை அண் டிய பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வைக்கப் பட்ட புத்தர் சிலைக்கு பல்வேறு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். இதனால் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக புத்தர் சிலை அங்கிருந்து அகற்றப்பட்டு பின்னர் திங்கட்கிழமை பிற்பகல் பௌத்த சம்பிரதா யப்படி மீண்டும் அதே இடத்தில் வைக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் சமூக ஊடகங்களில் தீவிரமாக பரப்பப்பட்ட நிலையில் பொதுமக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இது நாட்டு மக்கள் மத்தியில் அதிகளவு பேசப்பட்டது.

இது மிகவும் கவலைக்கிடமான, கசப்பான, பாரதூர மான ஒரு விடயமாகும். கலவரத்தின் போது அதிகா ரத்துடன் நீங்கள் கை வைத்துள்ளீர்கள். இது பௌத்த மதத்தின் உரிமையை கேள்விக்குறியாக்குகிறது. பௌத்த மதம் என்பது பல ஆண்டுகளாக இலங்கையில் உள்ள ஒரு மதமாகும். புத்தருக்கு சொந்தமான இலங்கை பூமி யில்தான் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் வாழ்கின்றனர்.

புத்தர் சிலையை அகற்றுமாறு கலவரம் செய்தவர்க ளால் தாக்கப்பட்ட பல தேரர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். தேரர்களை தாக்கும் காணொ ளிகள் சமூக ஊடகங்களில் பரவி வருகிறது. இது மிகவும் தவறாகும். பௌத்த வணக்கஸ்தலத்தை கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ள ஓரிடத்தில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை அகற்றுவதற்கு யாருக்கு உரிமை உள்ளது. மக்களை தூண்டுவது அரசாங்கம்தான். காலாகாலமாக அரசாங்கம் மாறினாலும் பௌத்த மக்களின் உரிமை மாறாது - என்றார். (ஐ)

## இந்தியாவின்...

பாராளுமன்றத்தில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டுக் கான வரவு - செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார். மேலும் கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பில் புதிய திட்டங்கள் எடுக்கப்பட்டுள்ளன - என்றார். (அ)

## இளங்குமரன்...

சட்டத்தரணி ஒருவரை நியமிப்பதற்கு கால அவகாசம் கோரியமையால் வழக்கு பெப்ரவரி 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைவர் நீதிபதி ரோஹந்த அபேசூரிய, பிரியந்த பெனாண்டோ ஆகி யோரைக் கொண்ட அமர்வின் முன்பாக நேற்று குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது இளங்குமரன், கஜபாகு ஆகியோர் நீதிமன்றத்தில் முற்பட்டிருந்தனர். மனுதாரரான சுமந்திரன் சார்பாக சட்டத்தரணி மோகன் பாலேந்தி ராவின் அறிவுறுத்தலின் பேரில் சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி கனகஈஸ்வரன் முற்பட்டிருந்தார்.

முன்னதாக, தமிழ்நாட்டில் அகதியாக தஞ்சம் கோரியிருந்த சின்னையா சிறிலோகநாதன் அங்கிருந்து கடந்த மே 29ஆம் திகதி பலாலி விமான நிலையம் ஊடாக வருகை தந்த நிலையில் அவர் குற்றப் புலனாய் வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

பின்னர், 30ஆம் திகதி மல்லாகம் நீதிமன்றில் முற்படு த்தப்பட்டபோது சின்னையா சிறிலோகநாதனின் புதல்வரின் கோரிக்கைக்கு அமைவாக எம். ஏ. சுமந்திரன் மன்றில் முன்னிலையாகியிருந்தார்.

நீதிவான் சின்னையா சிறிலோகநாதனை விளக்கமறி யலில் வைத்து விசாரிப்பதற்கு அனுமதி அளித்திருந்தார்.

இதற்கு மறுநாள், இளங்குமரன் எம்.பி. உள்ளிட்ட வர்கள் பிறிதொரு சட்டத்தரணி ஊடாக மனுத்தாக்கல் செய்த நிலையில் அவருக்கு பிணை வழங்கப்பட்டது. அதன்பின்னர் நீதிமன்றத்துக்கு அருகில் வைத்து இளங்கு மரன் எம். பி. உள்ளிட்டோர் சிறிலோகநாதன் விளக்க மறியலில் வைக்கப்படுவதற்கு சுமந்திரன் காரணம் என்ற சாரப்படத் தெரிவித்த கருத்துகளை அவதானித்து, சுமந் திரன் இளங்குமரனுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உயிர்மாய்ப்பில்...

இங்கு, ஒரு இலட்சம் ஆண்களுக்கு 27 பேரும் ஒரு இலட்சம் பெண்களுக்கு 5 பேரும் தற்கொலை செய்து கொள்கின்றனர். இதனால், நாட்டின் வீதம் ஒரு இலட் சம் பேரில் 15 என்பதாக உள்ளது என்றும் அந்த அமைப் பின் அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், உலகளவில் சராசரி தற்கொலை விகிதமான ஒரு இலட்சம் பேரில் 10.5 பேர் என்பதை விட இலங்கை யில் தற்கொலை செய்யும் ஆண்களின் எண்ணிக்கை அதிகம். 2022ஆம் ஆண்டு நடத்தப்பட்ட உலக சுகாதார அமைப்பின் ஆய்வின்படி இந்த அறிக்கை வெளியிடப் பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## துப்பாக்கி...

மற்றும் 59 வயதுடைய தம்பதியரே உயிரிழந்தனர். 9 மி.மீ ரக துப்பாக்கியை பயன்படுத்தி இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. சம்பவம் தொடர் பில் தங்காலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# வடக்கு மாகாணத்தில் வியட்நாமியர் முதலீடுகள் மேற்கொள்ள ஊக்குவிப்பு!

**ஆளுநரிடம் தெரிவித்தார் அந்நாட்டு தூதுவர்**

யாழ்ப்பாணம்,நவ. 19

**வியட்நாமைப் போல போரை எதிர்கொண்ட வடக்கு மாகாணம் எதிர்நோக்கும் சவால்களை நாங்கள் நன்கு புரிந்துகொள்ள முடியும் என்றும், வடக்கு மாகாணத்தில் வியட்நாமியர்கள் முதலீடு செய்வதற்கான ஊக்குவிப்புகளை வழங்குவோம் என்றும் இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் ட்ரின் தி தாம் தெரிவித்தார்.**



வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்த வியட்நாம் தூதுவர் தலைமையிலான குழுவினர், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையிலான குழுவினரை நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை ஆளுநர் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர் நா.வேதநாயகன், போருக்குப் பின்னர் வியட்நாம் வேகமாக மீண்டு வளர்ச்சி பெற்ற அனுபவங்கள் வடக்குக்கு பயனுள்ளதாக இருக்கும். போர் முடிந்து 16 ஆண்டுகள் ஆனபோதிலும், வடக்கில் பெருமளவிலான தொழிற்சாலைகள் உருவாகவில்லை. விவசாயிகள், மீனவர்கள் தங்கள் மூல உற்பத்திகளை பெறுமதிசேர் உற்பத்திப் பொருட்களாக மாற்றி விற்பனை செய்ய முடியாமல் உள்ளனர். அதற்குத் தேவையான தொழிற்சாலைகள் அவசியம். கிராமப்புற உட்கட்டமைப்பு இன்னும் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளது. தற்போதைய அரசாங்கத்தின் காலத் தில் இந்த துறைகளில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது-என்றார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர், சுற்றுலாத்துறைக்கு மாகாணம் சிறப்பு முக்கியத்துவம் அளித்து வருவதாகவும், இந்தத் துறை இன்னும் தொடக்க நிலையில் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், வடக்கு மாகாணத்தின் புள்ளிவிவரங்கள், துறை ரீதியான சவால்கள், தேவைப்பாடுகள் மற்றும் முதலீட்டுக்கான வாய்ப்புகள் குறித்து வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் - திட்டமிடல், விரிவான விளக்கமொன்றை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த தூதுவர் ட்ரின் தி தாம், வியட்நாம் ஏற்றுமதி நோக்கிலான விவசாயத்தில் வலுவாக செயல்படுகிறது. அந்த அனுபவங்களை வடக்குடன் பகிர்ந்து கொள்ள நாங்கள் தயாராக உள்ளோம். ஏனைய தொழில்நுட்ப அனுபவங்களையும் பகிர முடியும். வடக்கு மாகாண அதிகாரிகளை வியட்நாமுக்கு அழைத்து எங்கள் அனுபவங்களைப் பகிரலாம். நீங்கள் முன்வைத்த முதலீட்டு வாய்ப்புகளை வியட்நாமிய முதலீட்டாளர்களுக்கு தெரிவிப்பேன். அவர்களை வடக்கில் முதலீடு செய்ய ஊக்குவிப்பேன். அதிக எண்ணிக்கையிலான வியட்நாமியர்கள் தற்போது இலங்கைக்கு பயணம் செய்கின்றனர். வடக்கு மாகாணத்தின் சுற்றுலா மையங்களை அவர்களிடம் அறிமுகப்படுத்தி இங்கு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்வேன்-என்றார்.

அத்தோடு, முதலீட்டாளர்கள் நேரத்தை மிச்சப்படுத்த விரும்புவார்கள். எனவே கொழும்பு - யாழ்ப்பாணம் இடையிலான உள்ளூர் விமான சேவை மேலும் வினைத்திறன் பெறுவது அவசியம். வியட்நாமின் மாநிலங்களுடன் வடக்கு மாகாணமும் நேரடி ஒத்துழைப்புக் கட்டமைப்புகளை உருவாக்க விரும்புகிறோம் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ஆதிக்கம் செலுத்தும் வகையில் எச்.ஐ.வி. தொற்று போக்குநிலை!

**எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் தகவல்**

கொழும்பு, நவ. 19

நாட்டில் ஆதிக்கம் செலுத்தும் வகையிலான எச்.ஐ.வி தொற்று போக்கு காணப்படுகிறது. இவ்வாண்டில் புதிதாகப் பதிவான பெரும்பாலான எச்.ஐ.வி. தொற்றாளர்களில் ஆண்கயே அதிகளவில் காணப்படுவதாக எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.

தேசிய பாலியல் தொற்றுகள்ஃஎய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் தரவுகளுக்கமைய, இவ்வாண்டின் இரண்டாம் காலாண்டில் (ஏப்ரல் - ஜூன்) மாத்திரம் 200 புதிய எச்.ஐ.வி தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். முதல் காலாண்டில் இந்த எண்ணிக்கை 230ஆகப் பதிவாகியுள்ளது. இது 2009ஆம் ஆண்டிலிருந்து ஒரு காலாண்டில் பதிவான அதிகபட்ச எண்ணிக்கையாகும்.

ஏப்ரல் மற்றும் ஜூன் மாதங்களுக்கு இடையில் பதிவான புதிய தொற்றாளர்களில், 15-24 வயதுக்குட்பட்டவர்கள் 20 ஆண்கள் மற்றும் ஒரு பெண் ஆவர். மீதமுள்ளவர்கள் 25 வயதுக்கு மேற்பட்டவர்களாவர்.

மேலும், 2025ஆம் ஆண்டில் பதிவான எச்.ஐ.வி பாதிப்புகளில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான விகிதம் 7.6 இற்கு 1 என்ற குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது. இது ஆண்களே பெரும்பாலான தொற்று பாதிப்புகளுக்கு தொடர்ந்து காரணமாக உள்ளனர் என்பதைக் காட்டுகிறது.

இந்த ஆண்டு இதுவரை, எச்.ஐ.விஃஎய்ட்ஸ் தொடர்பான 23 மரணங்கள் பதிவாகியுள்ளன. 2024 ஆம் ஆண்டில், 47 பேர் எச்.ஐ.விஃஎய்ட்ஸ் காரணமாக உயிரிழந்துள்ளனர். அதே நேரத்தில் நாடு முழுவதும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான எச்.ஐ.வி சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. 2009ஆம் ஆண்டு முதல், இலங்கையில் மொத்தம் 6759 எச்.ஐ.வி தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். இதில் 5366 ஆண்கள் மற்றும் 1573 பெண்கள் அடங்குவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# திருகோணமலையிலுள்ள விகாரை முறையாகப் பதிவு செய்யப்பட்டது!

கொழும்பு, நவ. 19

திருகோணமலையில் புத்தர் சிலை அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் இலங்கை அமரபுர மகா நிக்காயவின் தலைமை நாயக்க தேரர் கரகொட உயங்கொட மைத்திரி மூர்த்தி தேரர் ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

திருகோணமலையில் சிறீ சம்புத்த ஜயந்தி போதிராஜ விகாரை 1951 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருவதாகவும், குறித்த விகாரை முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2014 ஆம் ஆண்டில் விகாரை அமைந்துள்ள காணியின் உரிமை அப்போதைய ஜனாதிபதியால் வழங்கப்பட்ட மானியப் பத்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவரின் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில், திருகோணமலையில் இடம்பெற்ற சம்பவம் கடுமையாகக் கண்டிக்கப்படவேண்டும் எனவும் அமரபுர மகாநிக்காயவின் தலைமை தேரர் வலியுறுத்தியுள்ளார்.

எனவே, இந்த விடயம் தொடர்பில் உடனடியாக ஆராயுமாறும் தலைமை தேரரால் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட தம்பதி!

கொழும்பு, நவ. 19

வெலிமடை, போரலந்த, கந்தேபுஹூல்ப்பொல பிரதேசத்தில் வெள்ளத்தில் சிக்கி அடித்துச் செல்லப்பட்ட தம்பதியரில் மனைவி சடலமாக மீட்கப்பட்டுள்ளதுடன், கணவர் காணாமல் போயுள்ளார்.

வெலிமடை பிரதேச செயலகப் பகுதியில் பெய்த கன மழை காரணமாக நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை இருவரும் இந்த விபத்தில் சிக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதி மக்கள் நேற்று முன் தினம் இரவு முழுவதும் தம்பதியினரைத் தேடி வந்த நிலையில், பெண்ணின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 32 வயதுடைய பெண் எனவும் காணாமல் போனவர் 37 வயதுடைய ஆண் எனவும் தெரியவந்துள்ளது.

காணாமல் போனவரைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகத் பொலிஸார் தெரிவித்தனர்.

# முறையான தீர்வு கிடைக்காதமையால் தொழிற்சங்கப் போராட்டம் தொடரும்!

**அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம்**

கொழும்பு, நவ. 19

தமது பிரச்னைகளுக்கு முறையான தீர்வு கிடைக்காததால் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படும் என்று அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் தமது பிரச்னைகள் தொடர்பில் நிரந்தர தீர்வு கிடைக்கவில்லை என அச்சங்கத்தின் செயலாளர் வைத்தியர் பிரபாத் சுகததாச குறிப்பிட்டார்.

அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் வைத்தியர்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் நேற்று முன் தினம் முதல் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலின் பின்னர் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் அவசர நிறைவேற்றுக் குழு கூட்டம் நடைபெற்றது. அதில் தமது தொழிற்சங்க நடவடிக்கையைத் தொடர்ந்தும் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டதாக அச்சங்கத்தின் செயலாளர் வைத்தியர் பிரபாத் சுகததாச தெரிவித்தார். (அ)

# திருகோணமலைச் சம்பவம் அரசாங்கமே முழு காரணம்!

**மிகிந்தலை தலைமை தேரர் குற்றச்சாட்டு**

கொழும்பு, நவ. 19

திருகோணமலையில் புத்தர் சிலை குறித்து ஏற்பட்ட சர்ச்சைகளுக்கு அரசாங்கமே நேரடிப் பொறுப்பு கூறவேண்டும் என மிகிந்தலை ரஜ மகா விஹாரையின் தலைமை விகாராதிபதி வணக்கத்திற்குரிய வளவாஹெங்குனவேவே தம்மரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், திருகோணமலையில் உள்ள போதிராஜ சம்புத்த ஜெயந்தி விகாரையில் நடந்த சம்பவம் தொடர்பாக அவர், அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்துள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட அவர்-

இந்த அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு, புத்த சாசனத்துக்கு ஏற்படும் சேதம் குறித்து நாங்கள் எச்சரித்தோம்.

அரசாங்கத்துக்கு வாக்களித்தவர்கள் இப்போது நாம் எதிர்கொள்ளும் சூழ்நிலை மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சம்பவங்களைப் பற்றி வருத்தப்பட வேண்டும் -என்றார். (அ)

# யாழில் அதிகூடிய மழை வீழ்ச்சி!

யாழ்ப்பாணம்,நவ. 19

இலங்கையில் கடந்த 24 மணித்தியாலத்திற்குள் கிடைக்கப்பெற்ற அதிகூடிய மழை வீழ்சியாக யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் 101.7 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் என் சூரியராஜா இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 24 மணித்தியாலத்துக்குள் யாழ். மாவட்டத்தில் கிடைக்கப்பெற்ற அதிகூடிய மழைவீழ்ச்சி காரணமாக நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் பாதிப்புக்கு உள்ளாகி உள்ள நிலையில் 4 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன.

நேற்றுடன் மழை குறைவதற்கான சாத்தியங்கள் உள்ள நிலையில் எதிர்வரும் 22 ஆம் திகதி மீண்டும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மழை பெய்வதற்கான எதிர்வு கூறல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கும் மழை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை நீடிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

கடற்தொழிலாளர்களைப் பொறுத்தவரை சூறாவளிக்கான எச்சரிக்கைகள் விடப்படாத நிலையில் மழை பெய்யும்போது இடி மின்னல் தாக்கங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. எனவே கடற்தொழில் நடவடிக்கைகளின்போது எச்சரிக்கையாக இருக்கவேண்டும்-என்றார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.11.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org